கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
கலைகலாசாரபீடம்
முதலாம் வருட/முதலாம் அரையாண்டுக் கலைமாணித் தேர்வு 2017/2018
(2017/2018 Batch- November/December 2019)

# EC 1112 Fundamentals of Microeconomics

நேரம்: 02 மணித்தியாலங்கள்

பகுதி I ல் இரு வினாக்களுக்கும் பகுதி II ல் இரு வினாக்களுக்குமாக மொத்தம் நான்கு வினாக்களுக்கு விடை தருக.

---

## பகுதி I

01. (i) பொருளியலின் நோக்கம் அல்லது முக்கியத்துவம் யாது? (04 புள்ளிகள்)

(ii) "பொருளாதார வளங்கள்" என்பதனால் கருதப்படுவதென்ன? (04 புள்ளிகள்)

(iii) புதுப்பிக்கத்தக்க வளங்கள், புதுப்பிக்க முடியாத வளங்கள் என்பவற்றை வேறுபடுத்துக. (04 புள்ளிகள்)

(iv) இயற்கை வளங்களின் பயன்பாட்டினைத் தீர்மானிக்கும் காரணிகள் யாவை? (04 புள்ளிகள்)

(v) "பொருளியலில் பணமானது மூலதனமாக கருதப்படுமா?, இல்லையா? என்பதனை விளக்குக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

02. (i) சந்தை சமநிலை என்னும் எண்ணக்கருவினை விளக்குக. (05 புள்ளிகள்)

(ii) நிறுவனமொன்றின் கேள்வி, நிரம்பல் சார்புகள் பின்வருமாறு தரப்படுகின்றது.

$QDx = 50-5px$
$QSx = -50+20px$

அ) சமநிலை விலை, சமநிலைத் தொகை என்பவற்றினை கணிப்பீடு செய்க. (05 புள்ளிகள்)

ஆ) நுகர்வோன் மிகையை கணிப்பீடு செய்க. (05 புள்ளிகள்)

இ) உற்பத்தியாளன் மிகையைக் கணிப்பீடு செய்க. (05 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

03. (i) சமூகங்கள் எப்பொழுதும் தெரிவுப் பிரச்சனைக்கு முகங்கொடுப்பதேன்? விளக்குக. (05 புள்ளிகள்)

(ii) முயற்சியாண்மையானது ஏனைய உற்பத்திக் காரணிகளிலிருந்து எவ்வாறு வேறுபடுகின்றது? (05 புள்ளிகள்)

(iii) நாடொன்றில் மனித வளத்தின் வினைத்திறனை மேம்படுத்த மேற்கொள்ளப்படக்கூடிய நடவடிக்கைகள் யாவை? (05 புள்ளிகள்)

(iv) பொருளாதார செயற்றிறன் என்றால் நீர் விளங்கிக்கொள்வது யாது?

(05 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

## பகுதி II

04 (i) “கட்டில்லாச் சந்தைப் பொருளாதாரமொன்றின் பிரதான பண்புகளைக் கூறுக? (05 புள்ளிகள்)

(ii) கட்டில்லாச் சந்தைப் பொருளாதாரமொன்றில் விலைப் பொறிமுறையானது எவ்வழிகளில் உற்பத்திச் சாதனங்களை ஒதுக்கீடு செய்கின்றது? (05 புள்ளிகள்)

(iii) நிலைமாறும் பொருளாதாரங்கள் அல்லது மாறுநிலையில் உள்ள பொருளாதாரங்கள் என்பது பற்றி விளக்குக? (05 புள்ளிகள்)

(iv) சமவுடைமைப்பொருளாதாரம் நாட்டுக்கு அவசியமானதா? என்பது பற்றி ஆராய்க. (15 புள்ளிகள்)

(மொத்தம் 30 புள்ளிகள்)

05 (i) சந்தையைமைப்பினைத் தீர்மானிக்கும் காரணிகளைக் குறிப்பிடுக. (06 புள்ளிகள்)

(ii) நிறைபோட்டி நிறுவனமொன்றின் சமநிலையினை வரைபடத்துடன் விளக்குக.

(12 புள்ளிகள்)

(iii) தனியுரிமை மற்றும் தனியுரிமைப் போட்டிச் சந்தைகளை வேறுபடுத்துக.

(12 புள்ளிகள்)

(மொத்தம் 30 புள்ளிகள்)

06 பின்வருவனவற்றிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

அ) அமையச் செலவு

ஆ) கேள்வித் தொகை மாற்றம்

இ) புறநடை கேள்வி

ஈ) வருமானம் சார் கேள்வி நெகிழ்ச்சி

உ) சிலருரிமைச் சந்தை

( 5*6 = 30 புள்ளிகள்)